DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC.211/2024

Prosecution witness – PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.கார்த்திக் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused present.)

12.03.2026 at 01.15 P.M.

முதல் விசாரணை:–

1. நான் தற்போது சாயல்குடி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 2024ம் வருடம் சிக்கல் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 17.09.2024ம் தேதி 20.00 மணிக்கு எனக்கு கிடைத்த தகவலின் பேரில் இரண்டாவம் நிலைக்காவலர் – 1124 – திரு.வேல்முருகன் மற்றும் முதல் நிலைக்காவலர் – 449 திரு.உதயசங்கர் ஆகியோருடன் சிக்கல் ஆர்.எம். பெட்ரோல் பல்க் அருகில் மதுவிலக்கு சம்மந்தமாக கண்காணித்து ரோந்து சென்ற போது போலீசாராகிய எங்களை கண்டதும் ஓடி எத்தனித்த நபரை சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரித்தபோது அந்த நபர் சிக்கல் வடக்கு தெருவைச் சேர்ந்த ஆறுமுகம் மகன் கோவிந்தராஜ் என்றும் தெரியவந்தது.

3. அவரை சோதனை செய்த போது அவர் அரசு அனுமதியின்றி 180 M.L அளவுள்ள Old Chef என்ற லேபிள் ஒட்டப்பட்ட அரசு மதுபானங்கள் 18 பிராந்தி பாட்டில்கள் விற்பனைக்காக வைத்திருந்தார். அதனடிப்படையில் எதிரியை நான் காரணம் கூறி கைது செய்து அவர் வைத்திருந்த 18 பிராந்தி பாட்டில்களை அந்த இடத்தில் தனி நபர்கள் யாரும் இல்லாததால் உடன் வந்த போலீசாராகிய இரண்டாவம் நிலைக்காவலர் – 1124 – திரு.வேல்முருகன் மற்றும் முதல் நிலைக்காவலர் – 449 திரு.உதயசங்கர் ஆகியோர் முன்னிலையிலும் நான்

வழக்கு சொத்தை 20.10 மணிக்கு கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்தேன். அந்த அத்தாட்சியில் போலீசார் இருவரிடமும் சாட்சியாக கையொப்பம் பெற்றேன்.

4. பின்னர் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களுடன் 20.30 மணிக்கு நிலையம் வந்து நிலையக்குற்ற எண் 102/2024 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024 ன் கீழ் நான் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகும். பின்னர் சாட்சிகள் இரண்டாம் நிலைக்காவலர் – 1124 – திரு.வேல்முருகன் மற்றும் முதல் நிலைக்காவலர் – 449 திரு.உதயசங்கர் ஆகிய இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5. பின்னர் எதிரியை தக்க பிணையில் விடுவித்தேன். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான Old Chef என்று லேபிள் ஒட்டப்பட்ட அரசு மதுபானம் 18 பிராந்தி பாட்டில்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 அ.சா.ஆ.3 ஆகும். அத்துடன் வழக்கு விசாரணை முடித்து அன்றே எதிரி கோவிந்தராஜ் மீது 4(1)(C) TNP Amendment Act 2024 ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>

1. இந்த மது பாட்டில்களை கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் இடமான பெட்ரோல் பல்க்கில் பொதுமக்கள் நடமாட்டம் இருக்குமா என்றால் இல்லை. ஆர்.எம் பெட்ரோல் பங்கில் வேலை செய்த நபர்கள் இருந்தார்கள். எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் பையானது என்ன கலர் என்ன வகையானது என்று குறிப்பிட்டு அத்தாட்சியில் கூறவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு வடக்கு பகுதியில் அரசு மதுபானக்கடை உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் அரசு மதுபானக்கடை திறந்திருக்கும் என்றால்சரிதான். இந்த வழக்கில் சம்பவ சாட்சிகள் என்னுடைய பணிபுரிந்த காவலர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் தனிநபர் சாட்சிகளை நான் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.1 ஆன அத்தாட்சியில் தயார் செய்த நேரம் வேறொரு பேனாவினால் எழுதப்பட்டுள்ளது

என்றால் சரிதான். நான் சொல்வது போல் அத்தாட்சியானது சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்டது என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. அதற்கு தகுந்தாற் போல் வேறொரு மையினால் ஆன பேனாவில் அத்தாட்சி திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. நான் சொல்வது போல் எதிரியிடமிருந்து அத்தாட்சியில் எந்த வித மதுபானப்பட்டிகளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. மேலதிகாரி கேட்டுக்கொண்டதன் பேரில் காவல் நிலைய புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய்யான வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. அத்தாட்சி வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.12 18:46:50 +0000